செ.வெ.எண்: 59/ஜுன் நாள் : 23.06.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின்கீழ் செயல்பட்டு வரும் பணிகளை கவனிக்க தற்காலிக அடிப்படையிலான உதவியாளர் (Temporary contract Assistant) பணியிடத்திற்கு இன சுழற்சி முறையில் நிரப்பப்படவுள்ளது**

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் பணிகளை கவனிக்க மாதம் ரூ.10,000/-க்கு தற்காலிக அடிப்படையிலான உதவியாளர் **(Temporary contract Assistlant)** பணியிடத்தை இனசுழற்சி அடிப்படையில் நேரடி நியமனம் செய்வதற்கு 01.01.2016 அன்று 18 வயது முதல் 35 வயதுக்குள் இருக்கும் பொது பிரிவில் ( GT Priority ) முன்னுரிமை உள்ளவர்கள் ஏதாவதொரு பட்டப்படிப்பு படித்து ஓராண்டு முன் அனுபவம் உள்ளவர்கள் தங்களது பெயர், கல்வித்தகுதி, தொழில்நுட்ப கல்வி, ஜாதி, முன் அனுபவ விபரம் மற்றும் வீட்டு முகவரியுடன் தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு 12.07.2016 மாலை 5.00 மணிக்குள் முதல்வர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், முதுகுளத்தூர் ( தொலைபேசி எண் 04576-222114) அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

மேற்கண்ட தகவலை முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.சை.இரமேஷ்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**